# 11ஆவது திட்டம் – அணுகுமுறை அறிக்கை
# (2007 – 2012)

## 1. அறிமுகவுரை

**1.1.** தமிழ்நாடு சமூகப் பொருளாதார வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்று நாட்டின் மிகவும் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. 1920 ஆம் ஆண்டுகளில் நீதிக்கட்சியால் தொடங்கப்பட்ட, சமூக நீதியுடன் இணைந்த வளர்ச்சி அணுகுமுறையைத் தொடர்ந்து பின்பற்றி, தமிழ்நாடு எடுத்துக்காட்டான பொருளாதார நிலையை எட்டியுள்ளது.

**1.2.** பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு, வளர்ச்சித் திறன் கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது. தொழில், பணித்துறைகளின் வளர்ச்சி கடந்த ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் உறுதித் தன்மை பெற்று, அவ்வப்போது வேளாண் துறையில் ஏற்படுகின்ற சிக்கல்களை எதிர்கொண்டு மாற்று வேலை வாய்ப்பினை இத்துறைகள் வழங்கி வருகின்றன. இருப்பினும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் நிலையற்ற வளர்ச்சித் தன்மைகளைக் கடந்த சில ஆண்டுகளில் காண முடிகிறது. 1993–94 தொடங்கி 2005–06 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (Gross State Domestic Product) கூட்டு ஆண்டு வளர்ச்சி விழுக்காடு (Compounded Annual Growth Rate) 4.96% ஆகவும், தலாவாரி மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (Per Capita Gross State Domestic Product) வளர்ச்சி விழுக்காடு 4.02% ஆகவும் இருந்துள்ளன. இதே காலக்கட்டத்தில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் (1997–2002), பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் (2005–06 வரை) மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விழுக்காடுகள், முறையே 4.9% ஆகவும், 5.9% ஆகவும் இருந்துள்ளன. அனைத்திந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) வளர்ச்சி விழுக்காடுகள் ஒன்பதாவது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் முறையே 5.5%, 7.0% என அமைந்துள்ளன. இவற்றோடு ஒப்பிடுகையில்

மாநிலத்தின் வளர்ச்சி விழுக்காடுகள் குறைந்து காணப்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டுப் பொருளாதாரம் சில துறைகளில், சில ஆண்டுகளில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும் அதனின் வளர்ச்சிப் போக்கு தொடர்கிறது.

## 2. வேளாண் துறையின் சிக்கல்கள்

2.1. பல்வேறு துறைகளின் ஏற்ற இறக்கப் போக்குகள் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பல இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன. வேளாண் துறை தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பெரும்பான்மையான மக்களுக்கு இன்றும் வாழ்வாதாரமாக விளங்கி வருகிறது. பொருளாதாரத்தின் முதன்மைத் துறையாக விளங்கும் வேளாண் துறை 1993–94 தொடங்கி 2005–06 ஆம் ஆண்டு வரை கடுமையான நெருக்கடிக்கு உள்ளானது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்களிப்பு 1993–94 ஆம் ஆண்டில் 25 விழுக்காடாக இருந்த நிலை மாறி 2005–06 இல் 13.3 விழுக்காட்டிற்குச் சரிந்தது. வேளாண் துறையில் உற்பத்தி மதிப்பு 2005–06 ஆம் ஆண்டில் ரூ.13,060 கோடியாக (1993–94 நிலையான விலையில் – Constant Price) இருந்தது. இது 1993–94 ஆம் ஆண்டின் மதிப்பு அளவான ரூ.12,873 கோடியை விட சற்று உயர்ந்து காணப்படுகிறது. 1993 தொடங்கி 2006 ஆம் ஆண்டு வரை வேளாண் துறை, அதனைச் சார்ந்த பிற துறைகளின் இடு பொருட்களின் (Raw Materials) மீதான கூட்டப்பட்ட மதிப்பின் அளவு ஏற்ற இறக்கத்துடன் அமைந்தது. இத்துறையின் பங்களிப்பு 1998–99 ஆம் ஆண்டில் மிக அதிகமாகவும், 2002–03 தொடங்கி 2003–04 ஆம் ஆண்டு வரையில் மிகக் குறைவாகவும் இருந்தது. மாநிலத்தில் நிலவிய கடும் வறட்சியும் இதற்கு ஒரு காரணம். இச்சூழலில், 2000–01 ஆம் ஆண்டில் வேளாண் துறை அடைந்த மதிப்புக் கூட்டல் அளவான ரூ.23,170 கோடியை எட்டுவதற்குக் கூட அரசு பெரும் கவனத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. 2004–05 ஆம் ஆண்டின் உணவு தானிய உற்பத்தி 61.40 இலட்சம் டன்களாகும். 2001–02 ஆம் ஆண்டின் உற்பத்தி 76.89 இலட்சம்

டன்களாகும். மேற்கூறிய ஆண்டுகளின் வளர்ச்சிகளை ஒப்பிட்டால், 2004-05 ஆம் ஆண்டின் உற்பத்தியானது 2001-02 உற்பத்தியில் 80 விழுக்காடு அளவிற்கே எட்டியிருந்தது.

2.2. தமிழ்நாட்டில் வேளாண்துறை ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்து வருவதால், இத்துறையில் ஏற்படும் பாதிப்புகள், இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு மிகுந்த இன்னல்களை ஏற்படுத்துகிறது. நகரமயமாக்கும் போக்கு வளர்வதால் நிலம், நீர், உழைப்பு போன்ற காரணிகள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. இப்போக்கு வேளாண் துறையைப் பாதிக்கிறது. மாநிலத்தின் மொத்த சாகுபடி நிலங்களில், பயிரிடக்கூடிய நிலத்தின் நிகர அளவு 1977–80 ஆம் ஆண்டுகளில் 42.8 விழுக்காடு என்ற அளவிலிருந்து 2001–04 ஆம் ஆண்டுகளில் 37.05 விழுக்காடு அளவாக குறைந்துள்ளது. தரிசு நிலங்களின் அளவு 20 இலட்சம் ஹெக்டேரைத் தாண்டியுள்ளது. இது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 15 விழுக்காடாகும். வேளாண் துறையில் வறட்சி தொடர்வதாலும், பயிரிடும் நிலங்கள் மற்ற பொருளாதாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவது அதிகரிப்பதாலும் பயிரிடும் நிலங்களின் அளவு குறைந்து வருகிறது.

2.3. விவசாயிகள் சந்திக்கும் இன்னல்கள் பல. பெருகிவரும் மக்கள் தொகையால், ஒவ்வொரு விவசாயியும் சராசரியாக பயிர் செய்யும் நிலத்தின் அளவு குறைந்து வருகிறது. சராசரி நில உடைமை அளவு (Average Size of Land Holding) 1976–77 ஆம் ஆண்டின் 1.25 ஹெக்டேரிலிருந்து 2005–06 இல் 1 ஹெக்டேருக்கும் குறைவாகச் சரிந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் ( National Sample Survey Organisation ) 59ஆவது சுற்றுப் புள்ளி விவரப்படி, விவசாயிகள் அதிக அளவு கடன்பட்டுள்ளனர். குறிப்பாக, சிறு–குறு விவசாயிகளுக்கு அரசு சார்ந்த நிதி நிறுவனங்கள் போதிய கடன் வழங்காததால் இப்பிரிவு விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2.4. தொழில்துறை வளர்ச்சி பெறும்போது, வேளாண்துறை சார்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை விழுக்காடு குறைந்து வருவது இயற்கையே. இருப்பினும், தமிழ்நாட்டில் இன்னும் 56 விழுக்காடு மக்கள் வேளாண்துறை, அதனை ஒட்டிய பொருளாதார நடவடிக்கைகளையே நம்பியிருக்கின்றனர். எனவே, இத்துறையில் ஏற்படும் சரிவு ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வேலை வாய்ப்பையும், வருமானத்தையும் பாதிக்கிறது. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் (National Rural Employment Guarantee Programme) அதிக எண்ணிக்கையில் இவர்கள் பதிவு செய்திருப்பது வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிரொலிக்கிறது.

2.5. தமிழ்நாட்டில் 56 விழுக்காடு மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுக்கு மாநிலத்தின் மொத்த வருமானத்தில் ஏழில் ஒரு பங்கு வருமானம் தான் கிடைக்கிறது. இப்போக்கு வருவாய் பகிர்வின் ஏற்றத்தாழ்வு நிலையை வெளிப்படுத்துகிறது. வேளாண்துறை சாராத தொழிலாளரின் தலாவாரி உற்பத்தித்திறனில் (Per worker productivity in non-primary sector) வேளாண்துறை சார்ந்த தொழிலாளரின் தலாவாரி உற்பத்தித் திறன் நான்கில் ஒரு பங்குக்கும் குறைவாகவே இருக்கிறது. எனவே, விவசாயத் துறையின் வளர்ச்சியை மீண்டும் உயர் வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்வதற்குரிய செயல் திட்டங்களுக்கு மாநில அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

2.6. கால்நடை வளர்ப்பும், பால் உற்பத்தியும் ஊரக மக்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெருக்கி, வருமானத்தை அளிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த தொழில்களாகும். பால் உற்பத்தியும், இறைச்சி உற்பத்தியும் கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்ற இறக்கங்களோடு சரிவு நிலையில் இருந்தது. இதன் விளைவாக, மக்களின் ஊட்டச்சத்து தேவைகளும், மறைமுகமான வகையில் பாதிப்புக்குள்ளாயின. கால்நடை மருத்துவப் பணிகளையும், அதனோடு தொடர்புடைய சேவைத்

துறைகளையும் நவீனப்படுத்தி, விரிவுபடுத்துவது இத்துறையின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும்.

2.7. தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, பூ வளர்ப்பு போன்ற துறைகளின் விளை பொருட்களுக்கான தேவை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் பெருமளவில் வளர்ந்து வருகிறது. இத்துறைகளின் வளர்ச்சி, விவசாயிகளின் மறைமுக வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, வருமானத்தை உயர்த்தும் திறன் உள்ளது. எனவே, இத்துறைகளின் உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கும், தேவையான தொழில்நுட்ப நிதி உதவிகள் வழங்குவதற்கும், உரிய செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2.8. மீன் உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இத்துறை தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களிலும், உள்நாட்டு மீன்பிடிப்புப் பகுதிகளிலும், மீனவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன், மக்களுக்குக் குறைந்த விலையில் புரதச் சத்தினையும் அளிக்கிறது. இத்தொழில் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குகிறது. எனவே, ஒருங்கிணைந்த கொள்கைத் திட்டத்தின் மூலம் கடலோர, உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

## 3. தொழில் மற்றும் சேவைத் துறைகள்

3.1. ஐந்தாண்டுத் திட்டங்களின் தொடக்க ஆண்டுகளில் தொழில் துறையில் செய்யப்பட்ட பொது முதலீடுகள் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தன. தமிழ்நாட்டில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட தொழில் கொள்கைகள் பெரிய, நடுத்தர, சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவின. 1990–க்கு பிறகு தமிழ்நாடு தொழில் துறையில், குறிப்பாக, மோட்டார் வாகனத் தொழிலில் வெளிநாட்டு முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வருகிறது.

**3.2.** **1990** ஆம் ஆண்டுகளிலிருந்து தொழில் துறை **3.3** விழுக்காடு சீரான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. எனினும், **2000–01** தொடங்கி **2003–04** ஆம் ஆண்டு வரை தொழில் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டது. பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத தொழில் உற்பத்தி நிறுவனங்களின் மதிப்புக் கூட்டலானது 2000-01 இல் இருந்த அளவை விட 2003-04 இல் குறைவாகவும், அதன் பிறகு உயரவும் தொடங்கியது. தொழில் துறையின் பங்களிப்புகள் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தில் குறைவாக காணப்படுகிறது. எனவே, குடும்பம் சார்ந்த தொழில்களான கைத்தறி, நெசவுத் தொழில்களிலும் பின்னடைவுகள் ஏற்பட்டன. இந்தப் பின்னடைவுகளைச் சரிசெய்து, சிறு குறு கிராமத் தொழில்களை ஊக்கப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**3.3.** கட்டுமானத் துறையும் (Construction Sector) பதிவு செய்யப்படாத உற்பத்தி தொழில் நிறுவனங்களும் (Unregistered Manufacturing Firms) வேலை வாய்ப்பினைப் பெருக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. எனவே, இவ்வகைத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும்.

**3.4.** பணித்துறைகளில் (Tertiary Sector) பெற்றுவரும் தொடர் வளர்ச்சியின் காரணமாக மாநிலத்தின் பொருளாதாரம் சீரான வளர்ச்சியைக் கடந்த சில ஆண்டுகளாகவே பெற்று வருகிறது. தகவல்–தொழில்நுட்ப வளர்ச்சி தமிழகத்தின் நகர்ப்புறங்களில் பெருகி வருவதால் பணித்துறையின் வளர்ச்சி அதிகரித்து காணப்படுகிறது. நகர்ப்புறங்களில் செயல்படும் அமைப்பு சாரா பிற சேவைத் துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி, கிராமப்புறங்களிலிருந்து குடிபெயர்கின்ற கல்வி, தொழில் நுட்ப பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு இத்துறையில் வேலை வாய்ப்பினை அளிக்கிறது, அவர்களின் செயல்திறனையும் ஓரளவிற்கு உயர்த்துகிறது.

## 4. வேலை வாய்ப்பும் வறுமையும்

**4.1.** வேளாண்துறையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பு, வாழ்க்கைத் தரத்தை வெகுவாக பாதித்துள்ளன. தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் (National Sample Survey Organisation) புள்ளிவிவரப்படி 1983 தொடங்கி 1993–94 ஆம் ஆண்டு வரையிலான சராசரி ஓராண்டு வேலை வாய்ப்பு வளர்ச்சி 1.74 விழுக்காடாக இருந்தது. இவ்வளர்ச்சி 1993–94 தொடங்கி 2004 ஆம் ஆண்டு வரை 0.2 விழுக்காடாக குறைந்தது. பெண்களின் வேலை வாய்ப்பு 1993–94 ஆம் ஆண்டை விட 2004 ஆம் ஆண்டு அதிக அளவில் குறைந்து விட்டது. வேலை வாய்ப்பு அளிப்பதில் காணப்படும் இந்த தேக்கநிலை, வறுமையை குறைக்கும் முயற்சிகளுக்கு இடையூறாக அமைந்துவிடுகிறது. 2004 ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் தமிழ்நாட்டில் வறுமை விழுக்காடு 22% என்று சுட்டுகின்றன. நகர்ப்புறங்களில் மட்டும் இவ்விழுக்காடு 25% ஆக உள்ளது. தமிழ்நாட்டில் 2004 ஆம் ஆண்டில் 140 இலட்சம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர் என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

## 5. மனித வளர்ச்சி

**5.1.** மனித வளர்ச்சிக் குறியீடுகள், தமிழ்நாட்டில் சீராக நிலைப்பெற்றிருப்பதற்குக் காரணம் 1920 ஆம் ஆண்டுகளிலேயே அரசால் தொடங்கப்பட்ட சமூகநலத் திட்டங்களாகும். தமிழ்நாட்டிற்கு இதற்கென தனியான சமூகநீதி வரலாறே உண்டு. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகாரத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பினை அளிக்கும் முயற்சியாக, திராவிடக் கட்சிகளின் முன்னோடியாக விளங்கும் நீதிக்கட்சி 1921 ஆம் ஆண்டிலும், 1928 ஆம் ஆண்டிலும் இரண்டு முற்போக்கான வகுப்புவாரி இட ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியது. இதனால், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அனைத்து வகுப்பினரும் சம உரிமைகள் பெறும் வாய்ப்பினை

அளித்தது. சென்னையில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டமும் நீதிக்கட்சி காலத்தில் தான் முதலில் தொடங்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டில் முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இந்த நலத்திட்டத்தைச் விரிவுபடுத்தி செயல்படுத்தினார். 1980–ஆம் ஆண்டில் முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் இத்திட்டத்தைச் சத்துணவுத் திட்டமாக அறிவித்தார். முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, உணவுடன் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. குழந்தைகள், பெண்கள், முதியோர் உட்பட பழங்குடியினர், ஆதி திராவிடர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக பல்வேறு சீர்திருத்தச் சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மத்திய திட்டக் குழு 2001 ஆம் ஆண்டில் முதன் முதலாக வெளியிட்ட தனது தேசிய மனித வளர்ச்சி அறிக்கையில் (National Human Development Report 2001) தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள சமூகச் சீர்திருத்தத்தைப் போற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. *"இம்மாநிலம், வரலாற்று நோக்கில், மாபெரும் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் நடந்த இடமாக விளங்குகிறது. அரசியல் செயல்பாடுகள் விரும்பிய திசையில் செல்வதற்கு இது உந்துதலாக அமைந்தது. தமிழ்நாட்டில், முதன்முதலில் பெரிய அளவில் பள்ளிச் சிறுவர்களுக்கு தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம் நல்ல வெற்றி பெற்றுள்ளது. இத்திட்டம், பிள்ளைகளின் பள்ளி வருகையையும், ஊட்டச்சத்து நிலையையும் உயர்த்தியுள்ளது. மேலும், பள்ளிச் சிறுவர்களுக்கு இடையே சாதி வேறுபாடுகளைக் களையவும் உதவியுள்ளது. (பக்கம் 79-80 )*

இத்திட்டங்களின் விளைவாக, 1981 ஆம் ஆண்டு இந்திய மாநிலங்களில் மனித வளர்ச்சியில் ஏழாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு, 1991 ஆம் ஆண்டு கேரளா, பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாம் இடத்துக்கு முன்னேறியது; 2001 ஆம் ஆண்டும் இதே இடத்தினைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டது.

5.2. பொருளாதார சாதனைகள், மனித வளர்ச்சி ஆகியவற்றில் தமிழ்நாடு, இந்தியாவின் மிகவும் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாக இருப்பது பெருமை அளிக்கக் கூடியது என்றாலும், சில பிரச்சினைகளையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. எழுத்தறிவு விழுக்காடு, மாணவர்கள் சராசரி பள்ளி செல்லும் ஆண்டுகள், பிறக்கும் போது உள்ள வாழ்நாள் நீடிப்பு ஆகியன போதிய அளவிற்கு உயரவில்லை. மேலும், குழந்தை இறப்பு விகிதமும் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகும் குறிப்பிடுமளவிற்குக் குறையவில்லை. மக்களின் உடல் நலம் தொடர்பான குறியீடுகளில் மிக முக்கியமானதாகிய குழந்தை இறப்பு விகிதம் 2004 ஆம் ஆண்டு, உயிருடன் பிறந்த குழந்தைகளில் 1000க்கு 41 ஆக இருந்தது. 2007 ஆம் ஆண்டிற்குள் குழந்தை இறப்பு விகிதத்தை 1000க்கு 28 ஆக குறைக்க வேண்டும் என்ற பத்தாவது ஐந்தாண்டு திட்ட இலக்கை இன்னும் எட்டவில்லை. மாநிலத்தின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் இன்னும் எழுத்தறிவு அற்றவர்களாகவே உள்ளனர். பள்ளி மாணவர்கள் குறிப்பாகச் சிறுமியர் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடும் விகிதம் ஒரு முக்கியமானப் பிரச்சினையாகும்.

5.3. மேலும் எழுத்தறிவு, பிறப்பின் போதுள்ள வாழ்நாள் நீடிப்பு, தலாவாரி வருமானம் போன்ற பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளில் மாவட்டங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. மாநிலத்தின் மொத்த எழுத்தறிவு விழுக்காடு 73.5% ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தின் அதிக அளவான 87.55 விழுக்காட்டையும், தருமபுரி மாவட்டத்தின் குறைந்த அளவான 61 விழுக்காட்டையும் இணைத்துப் பெற்றது தான் இந்த 73.5 விழுக்காடு வளர்ச்சியாகும். வாழ்நாள் நீடிப்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் 73 வயதாக உயர்ந்துள்ளது. தருமபுரி, தேனி, மதுரை, பெரம்பலூர் மாவட்டங்களில் 62 வரை குறைவாக உள்ளது. 2002–03 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, தலாவாரி வருமான தர வரிசைப் பட்டியலில் கடைசி இடத்தைப் பெறுவது விழுப்புரம் மாவட்டம் ஆகும். விழுப்புரம் மாவட்டத்தின் தலாவாரி

வருமானம், சென்னையின் தலாவாரி வருமானத்தில் 32 விழுக்காடு அளவில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**5.4.** வாழ்க்கைத் தரத்தை வரையறுக்கும் அடிப்படைச் சேவைகள் போன்றவை கிடைப்பதிலும், பயன்படுத்தப்படுவதிலும் மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் சமனற்ற போக்குகளையே மேற்கூறிய வேறுபாடுகள் சுட்டுகின்றன. பேரளவு வளர்ச்சிக் குறியீடுகளில் (Macro Indicators) சீரிய சாதனைகளை மாநிலம் நிகழ்த்தி வரும் போது, மேல்தட்டு மக்களுக்கும் அடித்தட்டு மக்களுக்கும் வாழ்நிலையில் வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்நிலையை மாற்றி, வறுமையில் வாடும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு தனிக் கவனம் செலுத்திடவேண்டும். சரிசமமான வளர்ச்சியை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாத் தரப்பு மக்களிடையேயும் கொண்டு செல்வதே பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அறைகூவலாகும்.

**5.5.** கடந்த 15 ஆண்டுகளில் சமூகத் துறையில் தலாவாரி செலவு (Per Capita Expenditure) பெருகி, சமூக நீதி, முன்னேற்றம் போன்றவற்றில் தமிழ்நாடு முன்னணியில் இருந்தாலும், நிதித்துறையில் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது. சமூக சேவைகளுக்கு அதிக நிதியை செலவிடுவதோடு மட்டுமின்றி, அவற்றை சரியாகத் திட்டமிட்டு செயல்படுத்துவதன் வாயிலாக மாநிலத்தின் மனித வளர்ச்சிக் குறியீடுகளில் மேலும் பல முன்னேற்றங்களை அடைய வேண்டும். மாநிலத்தின் வளர்ச்சியில் அதன் மனித வள ஆற்றல் பெரும் பங்காற்றியிருக்கிறது. இம்மனித வள ஆற்றலைச் செம்மைப்படுத்திப் பாதுகாத்து அதன் தரத்தினை உயர்த்திடத் தேவையான, உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு பொதுச் செலவுகளைச் சீரமைப்பு செய்து நிதி நிர்வாகத்தையும் திறம்பட வழி நடத்திடல் வேண்டும்.

## 6. நகர்ப் புற வளர்ச்சியும் – பிரச்சினைகளும்

**6.1.** தமிழ்நாடு விரைந்து நகரமயமாகும் மாநிலங்களில் ஒன்றாக திகழ்வதால் மக்கள் தொகையில் 44 விழுக்காட்டினர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். பதினோராவது ஐந்தாண்டு திட்ட முடிவில் மாநிலத்தின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்துறை நெருக்கடி, தொழில் துறை, சேவைத் துறைகளின் வளர்ச்சி ஆகிய காரணங்களினால்தான் நகர்ப்புறங்களில் மக்கள் தொகை அதிகரிக்கிறது. இதனால், நகர்ப்புறங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் போதிய குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து போன்றவற்றில் பல்வேறு இடர்ப்பாடுகளையும் அறைகூவல்களையும் சந்தித்து வருகின்றன.

**6.2.** தற்போது 152 நகராட்சிகளில், 41 நகராட்சிகள் மட்டுமே குறைந்தபட்ச அளவான ஒரு நாளைக்கு ஒருவருக்கு 90 லிட்டர் வரை குடிநீர் வழங்குகின்றன. 18 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமே பாதாள சாக்கடை அமைப்பினைப் பெற்றிருக்கின்றன. நிதித் தேவைகளுக்கும், நிதி ஆதாரங்களுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி இருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் சொந்த முயற்சியிலேயே சிறந்த நகர் சார்ந்த சேவைகளைப் போதுமான அளவுக்கு வழங்கிடவேண்டுமெனில், அதற்கு இன்னும் இருபது ஆண்டுகளுக்கும் மேல் ஆகும் என்று கணக்கிடப்படுகிறது. உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அவற்றை பராமரிப்பதற்கும், நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படைச் சேவைகளை வழங்குவதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண்பதற்கும் பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு உதவிட வேண்டும்.

## 7. மாநிலத்தின் நிதி நிலைமை

7.1. தமிழ்நாட்டில் பொது நிதி மேலாண்மை பல ஆண்டுகளாகவே சிறப்பாக நடைபெற்று வருகிறது . மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (Gross State Domestic Product) மாநிலத்தின் சொந்த வருவாய், (State's Own Revenue) 1993–94 ஆம் ஆண்டில் 9.84 விழுக்காடு அளவிலிருந்து 2005–06ஆம் ஆண்டில் 11.51 விழுக்காடு அளவிற்கும், பின்னர் 2006–07 ஆம் ஆண்டில் 12.20 விழுக்காடு அளவிற்கும் உயர்ந்துள்ளது. ஆயினும் மத்திய அரசிடமிருந்து மாநிலத்திற்கு அளிக்கப்படும் நிதியின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் மொத்த நிதியில் ( மத்திய வரிகளில் பங்கு மற்றும் கடன்கள் தவிர்த்த திட்டம் சார்ந்த, திட்டம் சாராத மானியங்கள்) மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (Gross State Domestic Product) 1993–94 ஆம் ஆண்டில் 3.80 விழுக்காட்டிலிருந்து, நடைபெறுகிற நிதியாண்டில் 3.75 விழுக்காடாகக் குறைந்துள்ளது. மாநிலத்தின் மொத்த வருவாயில் மத்திய அரசு அளிக்கும் நிதி உதவி குறைந்து கொண்டே வருகின்றது. மாநிலங்கள் பெற்றுள்ள கடன்களை மறுசீரமைப்பதற்காக (Debt Restructuring), பன்னிரண்டாவது நிதிக்குழு சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதன்படி, நிதிப் பொறுப்பு சட்டத்தை (Fiscal Responsibility Act) பின்பற்றி மாநில அரசு தனது நிதி நிலைமையை சீர் செய்ய பொதுச் செலவினைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால், சந்தையில் நிலவும் வட்டி ஏற்ற இறக்கங்களை ஒட்டி கடனைப் பெற வேண்டிய நிலைக்கு மாநிலம் உட்படுத்தப்படுவதால் தேவையற்ற நிதி நெருக்கடியைச் சந்திக்கும் சூழல் ஏற்படுகிறது. இத்தகைய போக்குகள் மாநிலத்தின் நிதி அதிகாரத்தையும், மாநில சுயாட்சியின் அடிப்படைத் தன்மைகளையும் பறிக்கும் செயலாக அமைகின்றன.

7.2. இத்தகைய நிதித் தடைகளையும் தாண்டி மாநிலம் பல சமூகப் பொருளாதார நலத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது இன்றியமையாதது. பொருளாதார, சமூக உள் கட்டமைப்பு சேவைகளை அரசு வழங்கும் போது, அதற்குரிய கட்டணங்களை விதிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. பொது – தனியார் கூட்டு முயற்சி இத்துறைகளில் இன்னும் பெருமளவில் வெற்றி பெறவில்லை. தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், வேளாண்மை, ஊரகத் துறைகளை ஊக்கப்படுத்தவும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் அரசு பல ஆக்கப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

7.3. வரிகள், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதி உதவிகள், கடன்கள் வழியாக பொதுச் செலவை மேற்கொள்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் தொடர்கின்றன. இதன் காரணமாக மாநில அரசின் பொதுச் செலவு, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வீதத்தில் 1993–94 ஆம் ஆண்டில் 17.28 விழுக்காட்டிலிருந்து 2005–06ஆம் ஆண்டில் 15.60 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் 16.42 விழுக்காடாக உயர்ந்தது. மொத்த மாநில உற்பத்தியில் பொது வருவாய், செலவு விழுக்காடுகள் (Revenue and Expenditure Ratios) வீழ்ச்சியடைந்து வரும் சூழலில் சமூகத்துறையில் செய்யப்படும் அதிகளவு செலவினைத் தொடர்ந்துச் செய்வதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பொதுச் சேவைகளுக்கான தலாவாரி செலவின் (நடப்பு விலையில் – Current Prices) வளர்ச்சி விழுக்காடு 1993–2007 ஆம் ஆண்டுக் காலத்தில் அதிக அளவாக ஓராண்டிற்கு 30 விழுக்காடாகவும், தொடர்ந்து பொருளாதாரச் சேவைகளில் தலாவாரி செலவு 18 விழுக்காடாகவும், சமூகச் சேவைகளில் தலாவாரி செலவு 16 விழுக்காடாகவும் இருந்தது. தமிழகப் பொருளாதாரம் பெற்று வரும் வளர்ச்சியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலம் நிதி ஆதாரங்களை பெருக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**8. திட்டத்தின் பரந்த கொள்கைகள்**

**8.1.** மத்திய திட்டக்குழு அணுகுமுறை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இந்தியாவிற்கான 8.5% வளர்ச்சியை, தமிழ்நாட்டுப் பொருளாதாரமும் அடைவதற்கு மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள் மக்களின் வாழ்வாதாரங்களைக் காப்பது, ஊரக, நகர்ப்புற பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது, அடிப்படைத் தேவைகளை எல்லோருக்கும் வழங்குவது ஆகும்.

**9. திட்டத்தின் செயல் அணுகுமுறை**

**9.1.** மாநிலத்தின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ள வேளாண்துறையில் உள்ள நெருக்கடிகள், வேலைவாய்ப்பில் உள்ள தேக்க நிலை, மக்களின் வாழ்வு ஆதாரங்களில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் சரிவு, மனித வளர்ச்சியில் காணப்படும் இடைவெளிகள் போன்றவை தொடர்வதால், மாநில அரசின் ஆக்கப்பூர்வமான நேரடித் தலையீடு அவசியமாகிறது. பொருளாதாரம் சரியான திசையில் செல்வதற்குப் பதினோராவது திட்ட காலத்தில் அரசின் வழிகாட்டுதல் எவ்வாறு அமையவேண்டும் என்பது இந்த அணுகுமுறை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**9.2. வேளாண் துறையை மீட்டமைத்தல்**

**9.2.1.** வேளாண் துறைக்குப் புத்துயிர் ஊட்டுவதே பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும். உயர் வேளாண் வளர்ச்சியே கிராமப்புறப் பகுதிகளில் வறுமையைப் போக்குவதற்கான திறவுகோலாகும். எனவே எல்லாத்

தடைகளையும் தகர்த்து வேளாண் துறையில் அதிக வளர்ச்சியைக் காண வேண்டும். இவ்வளர்ச்சியைத் தொழில் நுட்பத்தின் உதவியோடு மட்டுமல்லாமல், விவசாயிகளையும், அவர்களது நலனையும் மையமாகக் கொண்ட, தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய செயல் திட்டத்தின் வாயிலாக மட்டுமே எட்ட இயலும்.

**9.2.2.** அகில இந்திய அளவில் பல்வேறு பயிர் வகைகளின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை வகித்தாலும், பயிரிடும் நிலப்பரப்பின் அளவு குறைந்து வருகிறது. இதன் காரணமாக, பயிர்களின் உற்பத்தியில் சாதனை படைக்க முடியாத நிலை ஏற்படும். எனவே, சிறந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடும் செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.

**9.2.3.** மாநிலத்தில் சிறு குறு விவசாயிகளும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களும் பெருகி வருகின்றனர். இவர்களின் தேவையை நிறைவு செய்வதற்குப் பயிரிடக் கூடிய நிலங்கள் வழங்கிட வேண்டும்; சிறந்த விவசாயச் செயல்முறைகளை ஊக்குவித்து விலை குறைந்த இடுபொருட்கள் அளிக்க வேண்டும்; விலைபொருட்களுக்கு ஆதாய விலை (Remunerative Price) கிட்டும்படி செய்ய வேண்டும். 2006 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் கலைஞர் தலைமையிலான அரசு நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு ஏக்கர் பண்படுத்தப்பட்ட நிலங்கள் வழங்கும் திட்டத்தை ஏற்கனவே தொடங்கிவிட்டது. இது நிலமற்ற விவசாயிகளுக்குப் பொருளாதார அதிகாரமளிக்கும் முற்போக்கான திட்டமாகும். மேலும், தரிசு நிலங்களைப் பயிரிடும் நிலங்களாகப் பண்படுத்திப் பகிர்ந்தளிக்கும் முயற்சி வேளாண்துறையின் புத்தாக்கத்திற்கு மிகவும் உதவிடும்.

**9.2.4.** அமைப்பு சார்ந்த நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுதல் பல சிறு–குறு விவசாயிகளுக்கு இன்னும் ஒரு கனவாகவே உள்ளது. ஊரகத் துறைக்கு முன்னுரிமை அளித்து வணிக வங்கிகள் கடன் வழங்கினாலும், கூட்டுறவு வேளாண்

கடன் நிறுவனங்கள் பல இருந்தாலும், தனியார் வட்டி உறிஞ்சிகளிடமிருந்து விவசாயிகள் பெறும் அதிக வட்டிக் கடன் சுமையால் ஊரக மக்கள் இன்னலுக்கு உள்ளாகின்றனர். அடிக்கடி பருவ மழை பொய்ப்பதால், விளைச்சல் வீழ்ந்து விவசாயிகள் துன்பச் சுமைக்கு ஆட்பட்டு, பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்நிலை உணர்ந்த மாநில அரசு விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்து மீட்கக் கூட்டுறவுக் கடனையும், வட்டியையும் முழுமையாகத் தள்ளுபடி செய்தது. கூட்டுறவு அமைப்புகளுக்குப் போதிய கடன் வழங்கியும், கூட்டுறவுத் தேர்தல் நடத்தியும், கூட்டுறவு மேலாண்மையைத் தமிழ்நாட்டில் வலுப்படுத்திட வேண்டும்.

**9.2.5.** நீர்ப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. மேற்பரப்பு நீரைச் சீரான வகையில் பயன்படுத்துதல், நிலத்தடி நீரை எச்சரிக்கையுடன் எடுத்தல், இயற்கை நீர் ஊற்றுகளையும், மழைநீர் சேகரிப்பு வசதிகளையும் பாதுகாத்தல், மேம்படுத்தல் போன்ற நீர்வள ஆதாரத் திட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டும். வேளாண் பருவ நிலைமைகளுக்கு ஏற்பப் பயிரிடும் முறையை மாற்றியமைக்க வேண்டும். வறண்ட நிலப்பகுதிகளில் புதிய பயிர்களை அறிமுகம் செய்தல் வேண்டும். உயர் தொழில் நுட்பங்களை நேரடியாக விவசாயிகள் பெறும் வகையில் செயல்திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும்.

**9.2.6** வேளாண் உற்பத்திக்கும் உற்பத்தித் திறனுக்கும் போதிய ஊக்கமளித்திட நீர்ப்பாசன ஆற்றலை மேம்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். ஆற்றுப்படுகையை அடிப்படையாகக் கொண்டு நீர் பயன்படுத்தும் செயல்திட்டத்தை (River Basin Based Model for Planning of Water Use) மாநிலம் முழுவதற்கும் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனை நிர்வகிப்பதற்குப் போதிய அதிகாரத்துடன் கூடிய 'நீர் ஆதார மேலாண்மை ஆணையம்' (Water Resources Management Authority) ஒன்றினை அமைக்க வேண்டும். ஆற்றுப்படுகை மேலாண்மைக்கான முன்மாதிரியை உருவாக்குவது மட்டுமின்றி, மாநிலத்திலுள்ள

ஆறுகளை இணைப்பதில் உள்ள தொழில்நுட்ப - பொருளாதாரச் செயல்முறை சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும் பொறுப்பினை இவ்வாணையத்திடம் ஒப்படைக்க வேண்டும். மேம்பட்ட நீர்ப்பாசன, பயிர் மேலாண்மை செயல்முறைகள் வளர்க்கப்பட வேண்டும். குறைந்த அளவு நீரினைப் பயன்படுத்தும் வேளாண் தொழில்நுட்பங்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். பெரிய அளவிலான, ஆறு சார்ந்த நீர்ப்பாசன அமைப்புகளின் பயன்பாட்டை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளில் பலகாலமாக இருந்துவரும் நீர் ஆதாரங்களைப் புதுப்பிப்பது அவசியமாகும். வண்டல் படிந்ததாலும், ஆக்கிரமிப்பாலும் நீரோட்டம் தடுக்கப்பட்டுள்ள பல ஏரிகளை இணைக்கும் கால்வாய்களைத் துார் வாரிப் புதுப்பிக்க வேண்டும்.

9.2.7. உலக வர்த்தக நிறுவனத்தின் செயல்பாட்டினால் மாநிலத்தின் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் இன்னும் முழுமையாக உணரப்படவில்லை. பிற மாநிலங்களில் எண்ணற்ற விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். போதிய விலை தங்கள் பொருட்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலும், கடன் வட்டி சுமையாலும், விவசாயிகள் இந்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். சந்தைப் பொருளாதாரத்தின் எதிர்மறை விளைவுகளை விவசாயிகள் சந்திக்கின்றனர். இந்த உண்மைகளை அறிந்து மாநில அரசு ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். தமிழ்நாடு ஏற்கனவே உழவர் சந்தைத் திட்டத்தை மீண்டும் புதுப்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. உழவர் சந்தையின் ஆக்கப்பூர்வமான பயன்கள் தானிய சந்தைகளுக்கும் விரிவுப்படுத்தப்பட வேண்டும். கூட்டுறவு ஒழுங்குமுறைச் சந்தைகளை முறைப்படுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட முயற்சிகள் இடைத் தரகர்களின் பங்கினை வெகுவாக குறைத்து விடும். ஒப்பந்த விவசாய முறை தற்போது மாநிலத்தில் பரவி வந்தாலும், விவசாயிகள் ஒன்றிணைந்து ஓர் அமைப்பாக நின்று கூட்டுப் பேரம் பேசும் திறனைப் பெறாததால் சுரண்டலுக்கு உள்ளாகும் தன்மை உள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும்.

**9.2.8** காய்கறிகள், பழங்கள், பூக்கள் ஆகியவற்றின் தேவைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெருகி வருவதால் இவற்றை உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாய்ப்பினை விவசாயிகள் இலாபகரமான வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும். தரமான சாலைகள், சிறந்த போக்குவரத்து, குளிர்ப்பதன வசதிகள், சந்தையோடு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தல் போன்றன விவசாயிகளுக்குப் பெரும்பயனை அளிக்கும்.

**9.2.9.** ஊரக மக்களின் வருவாய்க்கும், வாழ்வாதாரத்திற்கும் உதவிடும் வகையில் கால்நடைத்துறையும், மீன் வளத்துறையும் அமைவதால், இவற்றின் வளர்ச்சியானது வேளாண்மையை மீட்டமைக்கும் செயல்திட்டத்தில் முக்கிய இணைப்பாக இருக்கும். மாநிலத்தில் நகர்மயமாதல் தற்போது வேகமாக நடைபெற்றுவரும் சூழலில், பால், முட்டை, இறைச்சி போன்றவற்றிற்கான உள்நாட்டுத் தேவைகள் பெருகியுள்ளதால், கால்நடைத்துறை, கோழிவளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற துறைகள் வளர்வதற்கு நல்ல வாய்ப்புகள் தோன்றியுள்ளன. பெரிய தொழில் நிறுவனங்களோடு போட்டியிட முடியாத கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, உள்நாட்டு மீன் வளர்ப்பு ஆகியன வீடு சார்ந்த தொழிலாக வளர்ந்து வருகின்றன. கூட்டுறவுத் துறையில் சிறு பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்கி இத்துறைகளை மேம்படுத்த வேண்டும். வீடு சார்ந்த இத்தொழில்களின் வளர்ச்சி ஊரக மக்களுக்குக் கூடுதல் வருமானத்தைப் பெற்றுத் தரும். மேலும், ஊரக மக்கள் குறைந்த செலவில் தேவையான ஊட்டச்சத்தினைப் பெற முடியும்.

**9.2.10.** வேளாண் சாராத தொழில்கள் ஊரகப் பொருளாதாரத்துடன் இணைந்து வளர்ந்துள்ளன. மேலும், வேளாண் சாராத தொழில்களிலிருந்து பெறப்படும் வருமானம் ஊரக மக்களின் வருவாய்க்குத் துணையாக உள்ளது. எனவே, ஊரகப் பகுதிகளில் இவற்றின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக, கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் செயல்பாட்டினைச் சீரமைத்து சிறு ஊரகத்

தொழில்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இயங்குவதற்கு வழிவகை காண வேண்டும்.

**9.2.11.** மாநிலத்தில் வேளாண் துறையை மீட்டமைத்தும், சுய தொழில் திட்டங்களை மேம்படுத்தியும், குடிநீர், சுகாதாரம், மின்சாரம், சாலை இணைப்பு வசதிகள் போன்ற சமூக உள்கட்டமைப்பு வசதிகளை அளித்தும், ஊரக வறுமை ஒழிப்பிற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். **2006–07** ஆம் ஆண்டில் வறுமையை **10** விழுக்காடு அளவிற்குக் குறைப்பதற்கும், **2012** ஆம் ஆண்டில் முழுமையாக வறுமையை அகற்றுவதற்கும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்கினை வகுத்தது. முதல் இலக்கு எட்டப்படவில்லை. எனவே, வறுமை ஒழிப்பிற்கான இரண்டாவது இலக்கினை அடைவதிலும் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நேரடி வேலை வாய்ப்பினை உருவாக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (National Rural Employment Guarantee Programme) போன்ற திட்டங்களை ஊரகப் பகுதிகளில் நிலவும் கடுமையான வறுமையைத் தீர்க்க உதவும் வகையில், ஏற்கனவே இயங்கி வரும் பிற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுடன் இணைத்துச் செயல்படுத்த வேண்டும்.

### 9.3. தொழில் முன்னேற்றம்

**9.3.1.** தமிழ்நாடு, இந்தியாவில் மிகவும் தொழில்வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. தோல்தொழில், ஆடைத்தொழில், நடுத்தர பொறியியல் தொழில்கள் போன்ற உற்பத்தி துறைகளில் உறுதியான அடித்தளத்தை மாநிலம் பெற்றுள்ளது. மோட்டார் வாகனத் தொழிலுக்கும் அவற்றின் உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்கும் தமிழ்நாடு முக்கியத் தளமாக உள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையிலும் தமிழ்நாடு சிறப்பான மையமாக வளர்ந்து வருகிறது. இதனால் பெரிய அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் ஆற்றல் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது.

**9.3.2.** தொழில்துறை சிறப்பான முறையில் செயல்படுவதற்கான குறிக்கோளை எட்டுவதற்குத் திட்ட முதலீடுகள் அதிகரிக்க வேண்டும். புதிய தொழில் முதலீடுகளை மாநிலம் பெறுவதற்கு உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும், தொழில் தொடங்குவதற்கான அரசு விதிகளை எளிமைப்படுத்துவதிலும் அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

**9.3.3.** சாலை இணைப்பிற்கும், போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதிகளில் சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். மின்சாரத் துறையில் முன்னேற்றம் காண்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், மாநிலத்தில் மின்சாரத் தேவைகளைச் சரியாகக் கணித்து, தடையற்ற மின்சாரத்தை தொடர்ந்து வழங்கிடும் வகையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் முதலீட்டில் பின்தங்கியுள்ள தென்மாவட்டங்களில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்றச் சூழலை ஏற்படுத்துவதற்கு மின் திட்டங்கள் அளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். தென்மாவட்டங்களில் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்தல், தென் மாவட்ட எரிவாயு இணைப்பு நிலையம் உருவாக்குதல், தனியார் துறை பங்களிப்புடன் தொழில் பூங்காக்களை அமைத்தல் ஆகியன தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும். ஆடைத் தொழிலில் பின்பற்றப்படும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை உணவு பதப்படுத்துதல் உட்பட்ட பிற துறைகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

**9.3.4.** தகவல் தொழில் நுட்பத் துறையும், அதன் தொடர்புடைய மற்றத் துறைகளும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத் தூண்டுதல் சக்தியாக வளர்ந்து வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய நகரங்களில் தகவல்–தொழில் நுட்ப துறை வளர்ச்சி பெறுவதற்குப் பூங்காக்களை அமைப்பதற்கு அரசு ஏற்கனவே உரிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. உயரளவு அலை வரிசை இணைப்புகளை ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்தி, ஒன்றிணைக்கும் திட்டத்தினைத்

தகவல்–தொழில் நுட்பத் துறையின் உதவியோடு செயல்படுத்தி, வளர்ச்சிக்கு உதவிட வேண்டும்.

**9.3.5.** தொழில் துறையின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப, தொழில் பயிற்சி பள்ளிகள், தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்களில் புதிய பாடத்திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் கற்பிக்க வேண்டும். நெசவு ஆடைத் தொழில், கட்டுமானத் தொழில்களில் திறன்மிக்க தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். இத்தொழில்களின் தேவைகளுக்கு ஏற்றாற்போல் பயிற்சி நிறுவனங்களை ஒழுங்கமைத்தால் ஏராளமான வேலை வாய்ப்பினை உருவாக்க முடியும்.

**9.3.6.** சிறுதொழில், ஊரகத் தொழில், குடிசைத் தொழில்களில் நேரடி அரசு தலையீடு மிகவும் தேவைப்படுகிறது. ஊரக வேலை வாய்ப்போடு தொடர்புடைய காதி மற்றும் கிராமியத் தொழில்களில் காணப்படும் வீழ்ச்சியை மிகக் கவனத்துடன் ஆராய வேண்டும். குறிப்பாகக் கைத்தறித்துறையில் இயக்கப்படாமல் இருக்கும் தறிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. சிறுதொழில் துறையில் காணப்படும் தொய்வினைக் களைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு உதவித் தொகைகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு இத்தொழில் நிறுவனங்கள் தமது போட்டித்திறனைத் தக்கவைத்துக் கொள்வதற்கு, மூலதனத்தை பெருக்கவும், உற்பத்திப் பொருள்களைப் பல்வகைப்படுத்தவும், தரம் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் அரசு ஆக்கப்பூர்வ ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்க வேண்டும்.

**9.4.நகர்ப்புற மேலாண்மை**

**9.4.1.** பெரும் முதலீடுகளை ஈர்க்கும் மையமாகத் தமிழ்நாடு இருந்து வருவதால், நகர்ப்புறப் பகுதிகளில் வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியமாகும். நம்முடைய

பெருநகரங்களிலும், பிற நகரங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகளையும், சேவைகளையும் உருவாக்க, காலவரையறைக்கு உட்பட்ட திட்டங்கள் தீட்டுவது உடனடித் தேவையாகும்.

**9.4.2.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய, மாநில நிதிக்குழுக்கள் நிதிகளையும், மானியங்களையும் வழங்குகின்றன. இவற்றோடு, தங்கள் சொந்த நிதி ஆதாரங்களை உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**9.4.3.** மத்திய அரசினுடைய ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பிக்கும் திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission) மற்றும் பிற திட்டங்களின் வழி பெறும் நிதி நிதித் தேவையை ஓரளவிற்குத் தான் நிறைவு செய்கிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகள் இந்நிதியின் மூலம் சிறிய அளவில் பயன் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நகரங்களில் வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகளை உலக அளவிற்கு மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக, பெருமளவில் நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும். இந்த நிதி ஆதாரத் தேவையை பொதுத்துறை–தனியார் துறை கூட்டு முயற்சி நடவடிக்கைகளின் மூலம் திரட்டலாம். சாலை அகலப்படுத்தும் திட்டங்களை புதிய தொழில்நுட்ப அணுகுமுறையோடு நிறைவேற்ற வேண்டும். அடிப்படைச் சேவைகளான நீர், சுகாதாரம் போன்றவற்றில் உயரளவு முதலீடு தேவைப்படுகிறது. இம்முதலீடுகள் மக்களின் குறைந்த அளவு கட்டணம் செலுத்தும் திறன் அடிப்படையில் அமைதல் வேண்டும். தேவைப்படும் நிதி ஆதாரங்களைப் பெற்றிட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் வலு சேர்க்கிற வகையில் அரசின் உறுதிமிக்கத் தலையீடு தேவைப்படுகிறது. சிறிய, நடுத்தர நகரங்களில் குடியேறும் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**9.4.4.** மாநிலத்தில், நகர்ப்புற மக்கள் தொகையில், நான்கில் ஒரு பங்கினர் ஏழைகளாக உள்ளனர். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நகர்ப்புற ஏழைமக்களின் தேவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்குரிய செயல்திட்டங்கள், நடவடிக்கைகளின் வாயிலாக சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க வேண்டும். ஊரக மக்களின் வறுமை குறைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளிப்பது போல, நகர்ப்புற வறுமையை அகற்றுவதற்கானச் செயல்திட்டங்களுக்குப் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஏழைகள் வேலை பெற்றிடும் வகையில் தகுதியையும், திறனையும் வளர்த்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் தற்போது நிலவும் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் நகர்ப்புற மக்களுக்கும் சென்றடையும் வகையில் கடனுதவி வழங்கிட வேண்டும். சுய உதவிக்குழு திட்டம், நகர்ப்புறங்களிலும் அதிக அளவில் உருவாவதற்கு வழிகாண வேண்டும்.

**9.4.5.** வீட்டுவசதி, குடிநீர், சுகாதாரம் ஆகியன நகர்ப்புற ஏழைமக்களுக்குத் தேவையான சேவைகளாகும். இதற்கான செயல்திட்டங்களை உருவாக்கிட வேண்டும். நகர்ப்புற குடிசைப் பகுதிகளை மேம்படுத்த வேண்டும். குடிசைப்பகுதிகளில் வாழ்வோரை இடமாற்றம் செய்வது தவிர்க்க இயலாதபோது, உரிய குடிமைச் சேவைகளையும், பிற உள்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதை உறுதி செய்வதில் அரசு போதிய அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் போன்ற நிறுவனங்கள், பயனாளிகள் பங்களிப்புடனும், தனியார் துறையின் ஈடுபாட்டுடனும் புதுமையானத் திட்டங்களைக் கூடுமான வரையில் வகுத்திட வேண்டும்.

## 9.5. மனித வளர்ச்சியில் சமனற்ற தன்மைகளைக் களைதல்

**9.5.1.** மனித வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பெற்றுள்ளது. இந்த மனித வளர்ச்சிக் குறியீடுகளின் பயன்கள் மக்களைச் சென்றடைவதில் பல இடைவெளிகளும், பல வேறுபாடுகளும் உள்ளன.

**9.5.2.** குழந்தை இறப்பு விழுக்காட்டினை, குறிப்பாக பெண்குழந்தை இறப்பு விழுக்காட்டினைக் குறைப்பதற்கும், மகப்பேற்றின் போது தாயின் இறப்பு விழுக்காட்டினைக் குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. சுகாதார உள்கட்டமைப்பையும், அச்சேவைகளைக் கடந்த காலங்களில் மேம்படுத்துவதற்கு, நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் சிறந்த பலன்களை அளித்துள்ளன. எனினும், சேலம், தர்மபுரி, தேனி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொடர்ந்து அதிகமான குழந்தை இறப்புகளைக் காண முடிகிறது. ஒட்டுமொத்த குழந்தை இறப்பு விழுக்காடு குறைந்தாலும், குழந்தைகள் பிறந்து ஒரு மாதத்திற்குள்ளேயே இறந்து விடும் நிலை (neo natal) உள்ளது. அதுபோன்றே, திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூார், கடலூார், விருதுநகர் மாவட்டங்களில் மகப்பேற்றில் தாய் இறக்கும் விழுக்காடு அதிகமாக உள்ளது. அவசர மகப்பேறு சேவைகளை மேம்படுத்தி தற்போது செயல்பட்டுவரும் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். மேலும், இதுபோன்ற அதிக இறப்பு விழுக்காடுகள் உள்ள பகுதிகளில் இத்திட்டங்களைக் கவனத்துடன் செயல்படுத்த வேண்டும்.

**9.5.3.** நகர்ப்புற மருத்துவநலம் எதிர்வரும் ஆண்டுகளில் பெரும் அறைகூவல் விடுப்பதாக உள்ளது. நகர்ப்புறப் பகுதிகளில் ஆரம்ப மருத்துவ நல உள்கட்டமைப்பு சரியான முறையில் அமையாததால், மருத்துவமனைகளில் வழங்கப்படும் இதர சேவைகள் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகின்றன. குறைந்த எண்ணிக்கையில் உள்ள மருத்துவப் பணியாளர்கள் அதிக பணிச் சுமையை ஏற்க வேண்டியுள்ளது. குறிப்பாக, நோய் முன் தடுப்பு சேவைகளின் தேவை நகர்ப்புறங்களில் அதிகரித்து வருகிறது.

நகர்ப்புற பகுதிகளில் குழந்தை இறப்பு விகிதம் உயர்ந்து வருவதால் இதனைக் குறைப்பதற்கானச் சேவைகளைச் சிறப்பான முறையில் வழங்கிட வேண்டும். நகர்ப்புறப் பகுதிகளில், தொற்றுநோய்க் கிருமிகளால் பரவும் மலேரியா, யானைக்கால் நோய், புதிதாக உருவாகும் சிக்குன்குனியா போன்ற நோய்களைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பதினோராவது திட்ட காலத்தில் மிகச் சிறந்த ஆரம்ப சுகாதார நல அமைப்பினை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**9.5.4.** குழந்தைகளிடம் ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்ந்து நீடிப்பது, சமூகப் பொருளாதாரக் காரணிகளோடு பெரிதும் தொடர்புடையதாக உள்ளது. மதிய உணவுத் திட்டத்தை வெற்றியுடன் நடைமுறைப்படுத்திக் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவினைப் போக்கி, தமிழ்நாடு இந்திய மாநிலங்களிலேயே சாதனை படைத்து வருகிறது. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தினை மாநிலம் முழுவதும் சீரான முறையில் வழங்கி, தமிழ்நாட்டினை ஊட்டச்சத்துக் குறைவில்லாத மாநிலமாக மாற்றுவது பதினோராவது திட்டக்காலத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மதிய உணவில் முட்டைகள் வழங்குவது ஊட்டச்சத்து நிலைகளை மேம்படுத்தி நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், விருதுநகர், திருவண்ணாமலை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்ற மாவட்டங்களை விட அதிக அளவில் உள்ளது. இதற்குரிய ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இம்மாவட்டங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகிறது. இக்குறைபாடுகளைக் களைவதற்குக் கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்த சிறுவர்கள் ஆகியோருக்குச் சீரான ஊட்டச்சத்தினை அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**9.5.5.** கல்வித் துறையில், தொடக்கக் கல்வி மாணவர் சேர்க்கையிலும், பள்ளி உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதிலும் தமிழ்நாட்டில் சிறந்த முன்னேற்றம்

ஏற்பட்டுள்ளது. இருப்பினும், மாணவர் சேர்க்கையில் மாவட்டங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள், தொடக்க நிலை கல்விக்குப் பிறகு பள்ளிப்படிப்பை நிறுத்தி விடுதல், உயர் கல்வி கிடைப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றில் அரசு கவனம் செலுத்த வேண்டும். தொடக்கக் கல்வியில் மாணவர் சேர்க்கையில் காணப்படும் இடைவெளிகளை அகற்றுவதில் சிறந்த முன்னேற்றத்தை மாநிலம் அடைந்துள்ளது. உயர்நிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கையை முழு அளவிற்கு உயர்த்துவதில் வெற்றி பெற வேண்டும். ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன், பள்ளிக் கட்டமைப்பு ஆகியவற்றினை மேம்படுத்த வேண்டும். இதற்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது. உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கையில் மாவட்டங்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகள், பால் சார்ந்த வேறுபாடுகள் (Gender Disparities) ஆகியன களையப்பட வேண்டும். குறிப்பாக, விழுப்புரம், கடலூர், திண்டுக்கல், திருவண்ணாமலை மாவட்டங்களில் காணப்படும் மாணவர் சேர்க்கையில் உள்ள பால் சார்ந்த இடைவெளியையும் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**9.5.6.** கல்வியை வழங்குவதில் தரமும், சமத்துவமும் சம பங்கினை வகிக்கின்றன. நகர்ப்புற–ஊரக, செல்வந்தர்–ஏழை, வடக்கு–தெற்கு மாவட்டங்களில் காணப்படும் வேறுபாடு ஆகியன சிறந்த பள்ளிக் கல்வியை வழங்குவதில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தி அரசிற்கு அறைகூவலாக அமைந்துள்ளது. தனியார் பள்ளிகளில் படிக்கும் வசதியான வீட்டுப் பிள்ளைகளுக்கும், மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கும் இடையில் அறிவு, திறன் நிலைகளில் பெரும் வேறுபாடுகள் நிலவுகின்றன. சில பள்ளிகள் மிக மோசமாக செயல்படுவதற்கான காரணங்களை ஆய்ந்து, முதல் தலைமுறையில் கல்வி பெறும் மாணவர்களின் பயிலும் ஆற்றலை மேம்படுத்த அரசின் செயல்திட்டங்கள் தேவைப்படுகின்றன. வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கும், வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் ஆங்கில மொழிப் பயிற்சி தேவைப்படுகிறது. இச்சூழலை உணர்ந்து, ஆங்கில மொழித் திறமையை வளர்ப்பதற்கு உறுதியான கல்வித் திட்டங்கள் செயல்படுத்தல் வேண்டும்.

செம்மொழியான தமிழின் முதன்மையைப் பள்ளிக் கல்வியில் விட்டுவிடாமல், இதனைக் கூடுதல் முயற்சியாக மேற்கொள்ள வேண்டும். ஆனால், இதற்கு போதிய வள ஆதாரங்களும், திறன் மிக்க ஆசிரியர்களும் தேவை. பள்ளிகள், ஆசிரியர்களின் திறனை மதிப்பீடு செய்வதற்கு உரிய அமைப்பும் வேண்டும். பெற்றோர்–ஆசிரியர் சங்கங்களின் உதவியோடு கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தல் வேண்டும்.

9.5.7. மேனிலைப் பள்ளிகளில் வழங்கப்படும் தொழில்கல்விப் பாடம் இக்காலச் சூழ்நிலையில் எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை மறுஆய்வு செய்ய வேண்டும். மேனிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பயிற்சியைக் கற்றுக் கொடுப்பதற்குச் செலவிடும் தொகையைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு அளித்து, அக்கல்வி நிறுவனங்களில் தேவைகளை மேம்படுத்துவது புதிய வேலை வாய்ப்புகளை மாணவர்கள் பெற உதவும். எனவே, இதுகுறித்து அரசு ஆய்வு செய்ய வேண்டும். கொல்லர் (Smith), தச்சர் (Carpenter), கம்மியர் (Plumber) போன்ற தொழில்களில் வேலை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. இதற்குரிய பயிற்சியைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் இளைஞர்களுக்கு அளிக்க வேண்டும். இதற்கான பட்டயப் படிப்புகளை முறைப்படுத்தி வழங்குவதற்கு அரசு உதவிட வேண்டும்.

9.5.8. உயர்கல்வி பெறுவதில் சாதி, மத அடிப்படையில் காணப்படும் வேறுபாடுகளைக் களைய வேண்டியது அவசியமாகும். நம்முடைய உயர்கல்வி நிறுவனங்களில் மனிதவியல்களையும் (Humanities), அடிப்படை அறிவியல்களையும் (Basic Sciences) பயிற்றுவிப்பதில் உள்ள தரம் வீழ்ச்சி கண்டு வருகிறது. பொறியியல் போன்ற தொழில்நுட்பப் படிப்புகளோடு ஒப்பிடும்போது, இவை இரண்டுக்கும் தேவை சரிந்து வருகிறது. இப்படிப்புகளில், பயிற்றுவிக்கும் முறையை உயரளவில் மேம்படுத்த, மாணவர்கள் ஆர்வத்துடன் கலை, அறிவியல் பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை மற்றும் மருத்துவ அறிவியல்களிலும் (Basic and Medical Sciences) ஆராய்ச்சி

மற்றும் மேம்பாட்டிலும் (Research and Development) உரிய கவனம் செலுத்த வேண்டும். இதற்குரிய உயர் ஆராய்ச்சி மையங்களைத் தமிழ்நாட்டிலுள்ள பல பல்கலைக் கழகங்களில் தோற்றுவித்து, பல துறைகளில் சிறப்பு உயர் ஆய்வு அமைப்புகளை உருவாக்க வேண்டும். மனிதவியல்கள் மற்றும் மொழியியல் உயர் ஆய்வு மையங்களை அமைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**9.5.9.** தமிழ்நாட்டில் மக்கள்நலம், கல்வி போன்ற சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதில் தனியார் துறையின் பங்கு பற்றியும் ஆய்வு செய்திடல் வேண்டும். கல்வி, மருத்துவத் துறைகளில் தனியார் துறையின் பங்கு விரிவடைந்து வருகிறது. தனியார் மருத்துவமனைகள் வழங்கும் சேவைகள் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகளை விட தரத்தில் உயர்ந்துள்ளன என்ற எண்ணம் மேலோங்கி உள்ளது. இக்கருத்து முழுமையாக ஏற்புடையது அல்ல. எனினும், தேவைப்படும் குறிப்பிட்ட இடங்களில் இக்குறையைப் போக்குவதற்குத் தனியார் துறை மருத்துவச் சேவையை இணைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாநிலத்தின் ஊரக, நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை எளியவர்கள் மருத்துவ உதவி, கல்வி வசதி பெறுவதற்கு பொதுத்துறை அமைப்புகளின் தேவை அவசியமாகிறது. ஆயினும், இந்த பொது அமைப்புகள் இன்னும் சிறப்பாகவும், பொறுப்பாகவும் செயல்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**9.5.10.** மனித வளத்தைப் பெருக்குவதற்கானச் செயல்திட்டங்களை நலிந்த பிரிவினரும் பெறுவதற்குரிய வழிவகைகளைக் காண வேண்டும். ஆதி–திராவிடர், பழங்குடியினர் குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும், கல்வி, மருத்துவ சேவைகள், வேலைவாய்ப்பு ஆகியன உரிய அளவில் கிடைக்கப் பெறாதவர்களாகவும் உள்ளனர். பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வியையும், வேலைவாய்ப்பினையும் வழங்கி, அவர்களின் வறுமை நிலையை மாற்ற வேண்டும். வீட்டு வசதி மற்ற சேவைகளை வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்தி, வருகிற திட்டக் காலத்தில் இம்மக்களுக்குச் சமூக, பொருளாதார

நலனையும், அதிகாரத்தையும் வழங்க வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு என்று தனியாக பள்ளிகளை நடத்தாமல் அம்மாணவர்கள் எல்லா சமுதாயப் பிரிவு மாணவர்கள் படிக்கின்ற பள்ளியிலேயே படிக்க வேண்டும். ஏனெனில், பழங்குடியினர், ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் பயிலும் பள்ளிகளின் கல்வித் தரம் மற்ற பள்ளிகளோடு ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. உயரிய வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் தொழில்கல்வி படிப்புகளில் சேருவதற்கான நிதி ஆதாரங்கள், ஆதி–திராவிடர், பழங்குடியினர் பிள்ளைகளுக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெரும்பாலான பிள்ளைகளுக்கும் கிடைப்பது அரிதாக இருப்பதால், அவர்கள் அரசு மற்றும் புகழ் பெற்ற தனியார் நிறுவனங்களில் சேர்ந்து பயின்றிட வகை செய்யுமாறு உதவித் திட்டங்கள் ஏற்படுத்திட வேண்டும்.

**9.5.11.** சமூகப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலமாக விளங்குகிறது. நமது மாநிலத்தில் பின்பற்றப்படும் முதியோர் ஓய்வூதியம், கைம்பெண்களுக்கு உதவித் தொகை வழங்குதல் போன்ற திட்டங்கள், ஏழ்மைநிலையில் உள்ள கருவுற்ற பெண்களுக்கான உதவிகள் வழங்கும் திட்டங்கள் போன்றவை, தமிழ்நாட்டைப் பின்பற்றி தேசிய அளவில் அப்படியே மறுஆக்கம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பதினோராவது திட்டக் காலத்தில் இத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தவும், இத்திட்டத்தின் பலன்கள் ஏழை எளியோருக்குச் சென்றடையவும் இத்திட்டங்களின் நிர்வாகத்தை மறுஆய்வு செய்ய வேண்டும். மாநில அளவில் எல்லா சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் இணைப்பது, பாதுகாப்புத் திட்டத்தால் பலன் பெறுகிற பயனாளர்களின் புள்ளி விவரத் தொகுப்பை உருவாக்குதல், திட்டம் செம்மையுற நடைபெறுவதற்கு உதவிடும். மாநிலத்தில் வயது முதிர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், முதியோர்க்கு வழங்கப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழைக் குடும்பங்களில் உள்ள வயதானவர்கள் அனைவருக்கும் சென்றடையுமாறு விரிவுபடுத்த வேண்டும். இத்திட்டத்தின் பயன்கள்,

ஏழைமக்களில், 70 வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் கிடைக்க வழிகாண வேண்டும்.

## 9.6. திட்டத்திற்கு நிதியை அதிகப்படுத்துதல்

**9.6.1.** வேளாண்மைத் துறையையும், சிறு தொழில்கள் துறையையும் சிக்கலிலிருந்து விடுவித்து, வளர்ச்சிப் பாதையில் செலுத்துவதற்குரிய செயல் திட்டங்கள் நிறைவேற்றிட வேண்டும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் இதுவும் ஒன்றாகும். இதற்குச் சமூக, பொருளாதாரத்துறைகளில் செலவினை அதிகரிக்க வேண்டும். 1990 ஆம் ஆண்டுகளில் வரிச் சீரமைப்பு நடவடிக்கைகளாலும், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியின் அளவு குறைந்து வருவதாலும், சேவை வரி போன்ற வரி விதிப்புகளை மாநிலத்திற்கு அளிக்காததாலும், மாநிலத்தின் நிதி நிலைமையில் இக்கட்டான சூழல் ஏற்படுகிறது. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் உயர் வளர்ச்சி நிலையை நோக்கிச் சென்றாலும், வரி அளிப்புத் திறன் (Tax Base) வெகுவாக வளரவில்லை. தொழில் துறைகளிலிருந்து கிடைக்கப்பெறும் வரி வருவாய் பெருமளவில் உயரவில்லை. ஆனால், வேகமாக வளர்கின்ற தொலைத் தொடர்பு, நிதி, நில விற்பனை ஆகிய துறைகளில் ஓரளவே வரி அளிக்கும் திறன் உயர்ந்துள்ளது. மேலும், நிதிப் பொறுப்புச் சட்டம் செயல்படுத்தப்படுவதன் காரணமாக கடன்மூலம் நிதியளிக்கும் வாய்ப்பும் மாநிலத்திற்கு மறுக்கப்படுகிறது. இத்தடைகளை எல்லாம் கடந்து பதினோராவது திட்டத்திற்கு நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**9.6.2.** மொத்த மாநில உள்நாட்டு வருவாயில் (Gross State Domestic Product) வளர்ந்து வரும் பணித் துறைகளில், சேவை வரி விதிக்கும் உரிமையை மாநில அரசுகள் மத்திய அரசிடம் பெற்றிட வலியுறுத்த வேண்டும். மத்திய–மாநில நிதி அமைப்புகளில் மாற்றம் செய்து, திட்டம், திட்டம் சாராத நிதி ஆதாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குவதற்கு நிதிக்குழுவிற்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட

வேண்டும். இவ்வகை மாற்றங்களை ஏற்படுத்தும் போது திறன்–சமத்துவக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசுகளுக்கு நிதி ஆதாரங்களை வழங்க வேண்டும்.

## 10. கூட்டாட்சி வரையறையில் தமிழ்நாட்டின் பதினோராவது திட்டம்

**10.1** மாநிலங்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்குச் சமூக, பண்பாட்டு, மத, மொழி வேறுபாடுகளை உள்வாங்கி இணைத்து ஏற்றுக்கொள்ளும் ஒரு அணுகுமுறை தற்போது இந்தியாவிற்கு தேவைப்படுகிறது. *"இந்தியா என்பது பெருமளவில் வேறுபாடுகளை உடைய பலத் தன்மைகள் மிக்க குறிக்கோள்களையும், மிகப்பெரிய அளவில் முற்றிலும் வேறுபட்ட நம்பிக்கைகளையும், பரந்து மாறுபட்ட பழக்கவழக்கங்களையும், ஒருங்கிணைந்த பல்கோணங்களில் ஓர் உண்மையான கருத்து விருந்தளிக்கக்கூடிய ஒரு நாடாக உள்ளது"* என்ற அறிஞர் அமர்த்தியா சென் அவர்களுடைய பட்டறிவைத் தேசிய அளவில் இணைத்து பொருளாதார முன்னேற்ற திட்டங்களை வகுத்திடல் வேண்டும்.

**10.2.** மாநிலம் உருவாக்கிடும் திட்டங்களின் வெற்றி, பெருமளவில், மத்திய–மாநில உறவுகளை மேம்படுத்துகிற கூட்டாட்சி நெறிகளின் உயிர்ப்புத் தன்மையில் தான் உள்ளது. மாநிலத்தின் திட்ட குறிக்கோள்களை எட்டுவதற்கு, அரசியல், நிதியியல் சார்ந்த ஆக்கப்பூர்வமான கூட்டாட்சி முறை தேவைப்படுகிறது. திட்டமிடுதல் கொள்கை பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது. இந்த மாற்றம் தற்போது மாநிலங்களின் உரிமை உணர்வுகளை ஏற்று இணைத்துச் செல்கின்றன. சமூகத் தளங்களிலிருந்து விலகி, தனிமைப்பட்டு பொருளாதார முன்னேற்றத்தை காண முடியாது. இணைப்பையும், பிணைப்பையும் ஏற்படுத்தி தான் வளர்ச்சி நிலைகளை எட்ட முடியும். எனவே, சமூகப் பொருளாதார திட்டங்களை வகுத்துச் செயல்படுவதில், மத்திய–மாநில அரசுகளின் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

திட்டமிடல் பற்றி திருவள்ளுவரின் சுடர்விடும் பேரறிவு ஈண்டு நோக்கத்தக்கது.

*பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்*

*இருள்தீர எண்ணிச் செயல் – குறள் **675***

இந்தக் குறளின் குறிக்கோளுக்கேற்ப, பதினோராவது திட்ட அணுகுமுறை அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை அறிக்கையை மக்கள் மன்றத்தில் விவாதத்திற்கு மாநில திட்டக்குழு முன்வைக்கிறது. திட்டத்தின் பல கூறுகளில் ஏற்படும் விவாதமும், அதன்வழி பெறுகிற பங்களிப்பும், கருத்தளிப்பும் தமிழகப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு வித்திடும்.

*********

# மாநிலத் திட்டக்குழு, தமிழ்நாடு அரசு

டாக்டர் கலைஞர் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு 19.05.2006 அன்று மாற்றியமைக்கப்பட்டது.

| | |
|---|---|
| தலைவர் | **தமிழ்நாடு முதலமைச்சர்**<br>**டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி** |
| துணைத் தலைவர் | பேராசிரியர் முனைவர் மு.நாகநாதன் |
| பகுதி நேர உறுப்பினர்கள் | பேராசிரியர் பெ.ஜெகதீசன் |
| | திரு.தமிழருவி மணியன் |
| | பேராசிரியர் ஜி.சிதம்பரம் |
| | திரு.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) |
| | டாக்டர் (திருமதி) சுநிதி சாலமன் |
| | திரு.கருமுத்து தி.கண்ணன் |
| முழு நேர உறுப்பினர் | முனைவர் இராம.சீனுவாசன் |
| பதவி வழி உறுப்பினர்கள் | அரசு செயலர், நிதித்துறை<br>திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., |
| | அரசு செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை<br>டாக்டர் டி.வி. சோமநாதன், இ.ஆ.ப., |
| உறுப்பினர்-செயலர் | திருமதி ஸ்மிதா நாகராஜ், இ.ஆ.ப., |